செ. கு. எண்: 192 நாள்:06.09.2020

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களின்

## அறிக்கை - 6.9.2020

செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரம் காவல் நிலையம், தனிப்பிரிவில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த **திரு. பா. ஈஸ்வரன்;** காஞ்சிபுரம் தாலுகா காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த **திரு. கோ. தனபால்;**

மதுரை மாநகரம், கூடல்புதூர் காவல் நிலையத்தில் காவலராகப் பணிபுரிந்து வந்த **திரு. நீலமேகம்;**

சென்னை பெருநகரக் காவல், சேத்துப்பட்டு காவல் நிலையத்தில் சட்டம் (ம) ஒழுங்குப் பிரிவில் முதல் நிலை பெண் காவலராகப் பணிபுரிந்து வந்த **திருமதி வ. எழிலரசி;** யானைக்கவுனி காவல் நிலையத்தில் சட்டம் (ம) ஒழுங்குப் பிரிவில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த **திரு. மு. சுரேஷ்;** பட்டாபிராம் காவல் நிலையம் சட்டம் (ம) ஒழுங்குப் பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த **திரு. ர. வெங்கடேசன்;** மாதவரம் போக்குவரத்து காவல் பிரிவில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த **திரு. ஜெ. மோகன்;** துறைமுகம் காவல் நிலைய சட்டம் (ம) ஒழுங்குப் பிரிவில் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த **திரு. கோ. ஹரிகிருஷ்ணன்;** சென்னை பெருநகரக் காவல், புதுப்பேட்டை, பணியிடைப் பயிற்சி மையத்தில் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த **திரு. க. சேகர்;** வேப்பேரி, குற்ற ஆவணக் காப்பகத்தில் பெண் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த **திருமதி எஸ். சாந்தி;**

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் மேற்கு காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த **திரு. அ. அன்பரசன்;**

திண்டுக்கல் மாவட்டம், சாணார்பட்டி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த **திரு. ந. நடராஜன்;**

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் காவல் கட்டுப்பாட்டு அறையில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த **திரு.சி.ராமச்சந்திரன்;**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், சிறுகனூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த **திரு. ஆர். பன்னீர்செல்வம்;**

நாகப்பட்டினம் மாவட்டம், திருவெண்காடு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த **திரு. அலெக்ஸாண்டர்;**

சேலம் மாவட்டம், மாநகர காவல் துறையில் வடக்கு போக்குவரத்துப் பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த **திரு. து. அம்பேத்கார்;**

ஆகியோர் உடல் நலக் குறைவால் காலமானார்கள் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

மதுரை மாநகரம், கீரைத்துறை காவல் நிலையத்தில் காவலராகப் பணிபுரிந்து வந்த **திரு.க. சிவக்குமார்;** ஆயுதப்படையில் காவலராகப் பணிபுரிந்து வந்த **திரு. ராஜேஸ்கண்ணன்;**

மதுரை மாவட்டம், தல்லாகுளம் போக்குவரத்து காவல் பிரிவில் பணிபுரிந்து வந்த ஆயுதப்படை முதல் நிலை பெண் காவலர் **செல்வி நா. ஜோதி;**

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த **திரு. அ. தங்கபாண்டி;** ஆயுதப்படையில் காவலராகப் பணிபுரிந்து வந்த **திரு. கே.ப்பி. கார்த்திக்;**

சென்னை பெருநகரக் காவல், புதுப்பேட்டை, ஆயுதப்படை, ஆ நிறுமம், 8ஆம் அணியில் இரண்டாம் நிலைக் காவலராகப் பணிபுரிந்து வந்த **திரு. ப. ராஜா;** புனித தோமையர் மலை போக்குவரத்து காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த **திரு. கா. நடராஜன்;**

நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த **திரு. ட்டி. சேகர்;** ஆயுதப்படையில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த **திரு. கே. உலகநாதன்;**

ஆகியோர் பல்வேறு சாலை விபத்துகளில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

**உடல் நலக் குறைவு மற்றும் சாலை விபத்துகளில் உயிரிழந்த 25 காவலர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.**

மேற்கண்ட **பல்வேறு துயரச் சம்பவங்களில் உயிரிழந்த 25 காவலர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.**

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**